தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 21-12-2018

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**சர்வதேச பயிலரங்கம் - உயிரி தொழில்நுட்பத் துறையில் ஆராய்ச்சி மற்றும் வேலை வாய்ப்புகள் - முன்னாள் மாணவர் கண்ணோட்டம்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வரும் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் மையம் நடத்தும் சர்வதேச பயிலரங்கம் - " உயிரி தொழில்நுட்பத் துறையில் ஆராய்ச்சி மற்றும் வேலை வாய்ப்புகள் - முன்னாள் மாணவர் கண்ணோட்டம் " என்ற தலைப்பில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் டிசம்பர் 21 மற்றும் 22 தேதிகளில் நடைபெற்று வருகிறது.

முனைவர் எஸ்.ஆர். ஸ்ரீரங்கசாமி அவர்கள், நிறுவன இயக்குநர், தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் மையம் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு தன்னுடைய உரையில் நவீன உயிரியலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார் மேலும் உயிரியல் மூலக்கூறுயியல் மற்றும் தாவர அறிவியல் ஆகிய துறைகளை ஒருங்கினைப்பதன் முக்கியத்துவத்தை பற்றியும் குறிப்பிட்டார்.

தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் மையம் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் இயக்குநர் மற்றும் சிறப்பு விருந்தினர் முனைவர் எஸ். சதாசிவம் அவர்கள் கல்வி நிறுவனங்களின் வளர்ச்சியில் முன்னால் மாணவர்களின்ன பங்களிப்பு முக்கியமானது என வலியுறுத்தினார். மேலும், முன்னால் மாணவர்கள் தாங்கள் பயின்ற பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியில் இணைந்து பணியாற்ற வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

முனைவர் து. சுதாகர், பதிவாளர், முனைவர். ஏ.விஜயகுமார், முதல்வர் மாணவர் நலம், முனைவர் எஸ்.மகிமைராஜா, முதல்வர் வேளாண்மை, முனைவர்.பி.சிவசுப்ரமணியன், முன்னாள் இயக்குநர் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் மையம் மற்றும் முனைவர். பி.பாலசுப்ரமணியன், முன்னாள் இயக்குநர், தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் மையம், முனைவர் எம். மகேஸ்வரன், முன்னாள் ஆராய்ச்சி இயக்குனர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மேலும் இப்பயிலரங்கில் இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, ஜப்பான், சிங்கப்பூர் மற்றும் மலேசியா உள்ளிட்ட அயல்நாடுகளிலும், மத்திய பருத்தி ஆராய்ச்சி நிறுவனம், தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழகம், ராணுவ உணவு ஆராய்ச்சி ஆய்வகம் போன்ற தேசிய நிறுவனங்களிலும் பணிபுரிந்து வருகின்ற தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் மைய முன்னாள் மாணவர்கள் தங்களுடைய ஆராய்ச்சி அனுபவங்களை பகிர்ந்ததுக் கொண்டதன் தொடர்ச்சியாக கவுரவிக்கப்பட்டனர். இதன் தொடர்ச்சியாக வேளாண்

உயிர்தொழில் நுட்பவியல் சங்கத்தின் துவக்க விழாவும் நடைபெறவுள்ளது. ஏறக்குறைய நானூற்று முப்பத்து ஏழு விஞ்ஞானிகள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்து வருகின்றனர்.

முன்னதாக தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் மைய இயக்குநர் முனைவர். திருமதி.ஆர்.ஞானம் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். தாவர உயிர் தொழில்நுட்பவியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர்.எஸ்.மோகன்குமார் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்